# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 02.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். CP 52B/2020</u>**

| | | |
|---|---|---|
| திருமதி. அ. ஜெகதீஸ்வரி | | மேல்முறையீட்டாளர் |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வேப்பூர் வட்டம்,<br>கடலூர் மாவட்டம். | எதிர் | பொது அதிகார அமைப்பு |

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திருமதி. அ. ஜெகதீஸ்வரி மற்றும் பொது தகவல் அலுவலர், திருமதி க.சாந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர் வட்டம், கடலூர் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 09.02.2020 தேதியிட்ட மனுவில், தன்னுடைய தந்தை திரு.அண்ணாதுரை, த/பெ செல்லமுத்து என்பவர் 30.1.2007ல் இறந்து விட்டதாக விழுப்புரம் நகராட்சி அலுவலர்களால் இறப்பு சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், 23.11.2018ல் இறந்ததாக இறந்ததாக பதிவு செய்த அண்ணாதுரைக்கு விழுப்புரம் மாவட்டத்தில் வண்டிமேடு பகுதியில் 30.1.2007ல் இறந்து விட்டதாக விழுப்புரம் நகராட்சி அலுவலர்களால் இறப்பு சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது என்றும் எது சரியான சான்றிதழ், போலியான சான்றிதழ் எது, போலியான சான்றிதழ் கொடுத்த

அலுவலர் பற்றிய விவரம் மற்றும் மேற்படி அண்ணாதுரைக்கு 12.12.2018 தேதியில் வாரிசு சான்றிதழ் வேப்பூர் வட்டாட்சியரால் வழங்கக்கப்பட்டது. அதனை விசாரித்த அலுவலர்கள் மற்றும் பரிந்துரை செய்த அலுவலர்கள் பெயர், முகவரி போன்ற விவரம் ஆகியவற்றை தகவலாக தருமாறு கோரி 11 இனங்களில், பொது தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வேப்பூர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 24.2.2020 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 18(1)ன் கீழ், புகார் மனுவை தகவல் ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் புகார் மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மனுதாரர் தனக்கு தகவல் வழங்கப்படவில்லை என்று விசாரணையின்போது தெரிவித்தார். விழுப்புரம் மாவட்டம் வேப்பூர் வட்டம் நல்லூர் கிராமத்தை சேந்த்த திரு.அண்ணாதுரை த/பெ செல்லமுத்து என்பவர் 30.1.2007 அன்று இறந்து விட்டதாகவும் அதற்கான இறப்புச் சான்றிதழ் பெற்று விட்ட நிலையில், 23.11.2018 அன்று இறந்துவிட்டதாக 2018ஆம் ஆண்டு நல்லூர் கிராம நிர்வாக அலுவலர் இறப்பு பதிவேட்டில் பதிய்ப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இது போன்ற போலியான சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆணையம் அறிய விரும்புகிறது. இது போன்ற செயல்பாடுகளால் அரசு அலுவலர்கள் மீது பொது மக்களிடையே அவநம்பிக்கையையும் அச்சத்தை உருவாக்கும் வகையில் உள்ளது. எனவே, இதுசம்பந்தமாக கடலூர் மாவட்ட சார் ஆட்சியர் அவர்கள் நேரிடையாக விசாரணை செய்து அறிக்கையினை 21 நாட்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்தரவிடுகிறது.

5. பொதுத்தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவலை 7 நாட்களுக்குள் அளித்து விடுவதாக விசாரணையின்போது தெரிவித்தார். பொது தகவல் அலுவலர், மனுதாரருக்கு உரிய தகவல்களை மனுதாரருக்கு அளித்து விட்டு, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். பொது தகவல் அலுவலரிடமிருந்து தகவல் பெற்றுக் கொண்டதாக ஒப்புதளித்துள்ளார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுகின்றன:-

**விசாரணையின்போது பொது தகவல் அலுவலர் உறுதியளித்தபடி மனுதாரர் பிரிவு 6(1)ல் கோரியுள்ள தகவல் அவருக்கு வழங்கப்பட்டது என்பதை ஆணையம் பதிவு செய்து, இந்நேர்வில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தியளிக்காதபட்சத்தில், பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய பரிகாரத்தை தேடிக் கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

6. மேற்படி ஆணைக்கிணங்க பொது தகவல் அலுவலர் தகவல் தர தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)ன்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. இந்நேர்வில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தியளிக்காதபட்சத்தில், பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்து, உரிய பரிகாரத்தை தேடிக் கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்தி, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 52 /B/2020</u>**
**<u>பெறுநர்</u>**
சார் ஆட்சியர்,
கடலூர் மாவட்டம்.

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வேப்பூர் வட்டம்,
கடலூர் மாவட்டம்.

திருமதி. ஜெகதீஸ்வரி,
த/பெ அண்ணாதுரை,
28, வடிவேல் நகர்,
வண்டிமேடு, விழுப்புரம் மாவட்டம்.

Copy to: File
SSPA-09.11.2020